DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No. 253 /2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.1 |
| Name | :சிங்கம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2023

-----

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் தொட்டப்பநாயக்கனூர் வசிக்கிறேன். எதிரியை தெரியும். நான் பாத்திரக்கடையில் வேலை பார்க்கிறேன். எனது மகன் பாலாஜி நாடார் சரஸ்வதி பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த 01.12.2019 காலை 9.00 மணியளவில் படிப்பதற்காக மாடிக்கு சென்றான். அதற்கு பின்பு 1மணி நேரம் கழித்து நான் பார்த்தேன். நான் பார்க்கும் போது எனது மகன் துாக்கில் தொங்கி கொண்டிருந்தான் அதை பார்த்த நான் சத்தம் போட்டவுடன் எனது மனைவி வந்து விட்டார். அக்கம் பக்கத்தில் இருந்தோர் நான் சத்தம் போடுவதை பார்த்து ரெகுபதி, கார்த்தி, முத்துச்சாமி, லட்சுமணன், ஆகியோர்கள் வந்து பார்த்தனர். அவர்கள் வந்து பார்த்து சாலால் இருக்கி இருந்து எனது மகனை கழற்றி இறக்கினார்கள். நாக்கு வெளியே தள்ளிக்கொண்டிருந்தது. அவன் இறந்து விட்டான் என தெரிந்து 11 மணியளவில் உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்தில் வயிற்று வலியில் தற்கொலை செய்து கொண்டதாக புகார் கொடுத்தேன். பின்பு பிரேத பரிசோதனை முடிந்து உடலை அடக்கிய பின்பு மறுநாள் நான், எனது மனைவி மகளுடன் மகனின்

புத்தகங்களை எடுத்த பார்த்த போது என் சாவுக்கு காரணம் இரவி என்றும் டியூசனுக்கு வர வேண்டும் என்று துன்புறுத்தியதால் தற்கொலை செய்வதாக கடிதம் இருந்தது. பின்பு கடிதத்தை போலீசாரிடம் கொடுத்தேன். அது சம்பந்தமாக போலீசார் விசாரித்தனர். காட்டப்படும் புகார் நான் காவல் நிலையத்தில் கொடுத்தது தான் அது அ.சா.ஆ.1 ஆகும்.

**குறுக்கு விசாரணை:**

எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் கொடுத்த புகார் எனது கைப்பட எழுதித் தான் கொடுத்தேன். புகாரில் என் மகனுக்கு கடந்த 5 வருடமாக வயிற்றுவலி ஏற்பட்டு நாட்டு வைத்தியம் பார்த்து வந்தோம் என்ற வாசகம் இடம்பெற்றது என்றால் சரிதான். சில நேரங்களில் சரியாகும் மீண்டும் வயிற்றுவலி ஏற்பட்டு அவதிபடுவான் என்ற வாசகமும் இடம் பெற்றது என்றால் சரிதான். கேரளா சென்று மூலிகை வைத்தியம் செய்து வந்தோம் என்றால் சரிதான். சில நேரங்களில் வயிற்றுவலி ஏற்பட்டு வயிற்றுவலி தாங்காமல் செத்தால் கூட பரவாயில்லை என்று பாலாஜி கூறுவான் என்றால் சரிதான். நான் எனது மகனின் உடலை பிரேத பரிசோதனை முடிந்து வாங்குவதற்காக அவசரப்பட்டு எழுதினேன். நான் அவ்வாறு அவசரப்பட்டு புகார் எழுதியதாக போலீசார் விசாரணையின் போது சொன்னேனா என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். எத்தனை புத்தகத்தில் மறுநாள் தேடினேன் என்றால் எல்லா புத்தகங்களிலும் தேடும் போது ஒரு நோட்டுப்புத்தகத்தில் தற்கொலைக்கு காரணம் எழுதப்பட்டது. அந்த நோட்டை எனது மகள் தான் முதலில் கண்டுபிடித்தார். வைத்தியம் பார்க்க இடைப்பட்ட காலத்தில் எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் போலீசார் விசாரணையின் போது எதிரியிடம் ஏற்கனவே எனது மகன் டியூசன் படித்ததாகவும், விபத்து ஏற்பட்டதால் நின்று கொண்டதாகவும், பள்ளிக்கு அருகில் உள்ள ஒரு ஆசிரியரிடம் டியூசன் படித்ததால் எதிரி என் மகனை திட்டியதாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனது மகன் எழுதிய நோட்டுபுத்தகத்தை மறுநாள் 12.00 மணியளவில் கொடுத்தேன். எனது மகன் நன்றாக படிப்பபான். எனது ஊருக்கும் உசிலம்பட்டிக்கும் 7கி.மீ. இருக்கும். நான் உசிலம்பட்டி

நகைக்கடை சந்தில் உள்ள ஒரு பாத்திரக்கடையில் வேலை பார்க்கிறேன். காலை 8 மணிக்கு வேலைக்கு வருவேன். மாலை 8 மணிக்கு வீட்டிற்கு செல்வேன். நான் சொல்வது போல் ஆஜர் எதிரி என் மகனை திட்டவில்லை என்றும், அவர் பெயரை சொல்லி என் மகன் கடிதமோ நோட்டுப்புத்தகத்திலோ எழுதி வைக்கவில்லை என்றும், ஆஜர் எதிரி ஆசிரியராக பணிபுரிவதால் பணம் பரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முதலில் என் மகன் வயிற்று வலியால் வலி தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டான் என்று கைப்பட புகார் கொடுத்து விட்டு பின்பு அரசியல் பிரமுகர்கள் மற்றும் உறவினர்களின் தூண்டுதலால் பொய்யாக இந்த எதிரியின் மீது என் மகன் எழுதியதாக சொல்லி போலிசாரிடம் கடிதமும், நோட்டும் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகன் இறப்பதற்கு முன்பு இறந்த என் மகன் எதிரி என்னை டியூசனுக்கு வருமாறு வற்புறுத்துவதாக சொன்னாரா என்றால் சொல்லியுள்ளார். நான் நேரடியாக சென்று எதிரியிடம் கேட்ட போது அவ்வாறு நான் வற்புறுத்தவில்லை என்று எதிரி சொன்னார். இது சம்மந்தமாக பள்ளி நிர்வாகத்திடம் புகார் ஏதும் தெரிவித்தேனா என்றால் கொடுக்கவில்லை. மறுநாள் போலீசாரிடம் கடிதத்தை கொடுத்து விட்டு போலீசாரிடம் கொடுத்த 161 வாக்குமூலத்தில் எதிரி எனது மகனை டியூசனுக்கு வரச்சொல்லி கண்டித்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. பணம் பறிக்க வேண்டும என்ற நோக்கோடு உண்மை சம்பவத்தை மறைத்து மிகைப்படுத்தி எதிரி மீது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை.</u>**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 09.06.2023

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.